**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**



# சந்திரயான் -3: இந்தியா உலக சாதனை!

## நிலவின் தென் துருவத்தில் தடம் பதித்தது

**பெங்களூரு, ஆக. 23:** இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) அனுப்பிய சந்திரயான்-3 விண்கலம் திட்டமிட்டபடி புதன்கிழமை மாலை 6.04 மணியளவில் நிலவின் தென் துருவத்தில் வெற்றிகரமாக தரையிறங்கியது.

சந்திரயான்-3 விண்கலத்தின் விக்ரம் லேண்டர் நிலவில் தடம் பதித்ததன் மூலம் இந்தியா உலக சாதனை படைத்துள்ளது.

ரஷியா, அமெரிக்கா, சீனா நாடுகளுக்கு அடுத்தபடியாக நிலவு ஆராய்ச்சியில் ஈடுபட்ட இந்தியா, 'சந்திரயான்' விண்கலம் மூலம் முயற்சிகளைத் தொடங்கியது. இஸ்ரோ தனது முதல் முயற்சியாக, 2008-ஆம் ஆண்டு அக். 22-ஆம் தேதி பிஎஸ்எல்வி-சி11 ராக்கெட் மூலம் ரூ. 365 கோடியில் உருவாக்கப்பட்ட சந்திரயான்-1 விண்கலத்தை விண்ணில் செலுத்தியது.

அது 2009-ஆம் ஆண்டு நவ.14-ஆம் தேதி 100 கி.மீ. தொலைவிலான நிலவின் சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தப்பட்டது. 11 அறிவியல் கருவிகளைத் தாங்கிச் சென்ற சந்திரயான்-1, நிலவில் தண்ணீர் இருப்பதை உறுதி செய்தது. 310 நாள்கள் நிலவைச் சுற்றி வந்த சந்திரயான்-1, 2009-ஆம் ஆண்டு ஆக. 28-ஆம் தேதி தனது ஆராய்ச்சியை நிறுத்திக் கொண்டது.

சந்திரயான்-1 வெற்றிக்குப் பிறகு நிலவைச் சுற்றிவரும் ஆர்பிட்டர், தரையிறங்கி ஆராய்ச்சி செய்யும் லேண்டர், ரோவர் கொண்ட ரூ. 604 கோடி செலவில் உருவான சந்திரயான்-2 விண்கலம், எல்விஎம் மார்க்-3 ராக்கெட் மூலம் 2019-ஆம் ஆண்டு ஜூலை 22-ஆம் தேதி விண்ணில் செலுத்தப்பட்டது. ஆக. 20-ஆம் தேதி நிலவின் சுற்றுப்பாதையில் ஆர்பிட்டர் நிலைநிறுத்தப்பட்டது.

அதன் பிறகு உந்துகலனில் இருந்து வெளியேற்றப்பட்ட லேண்டர், செப். 6-ஆம் தேதி நிலவின் மீது இறக்கும் முயற்சியின்போது தோல்வியடைந்தது. மெதுவாகத் தரையிறங்க வேண்டிய லேண்டர், வேகமாக இறங்கியதால் நிலவின் மேற்பரப்பில் மோதி தலைகீழாகக் கவிழ்ந்தது. ஆயினும், 7.5 ஆண்டுகள் செயல்படும் திறன் கொண்ட 'ஆர்பிட்டர்' மட்டும், 3 ஆண்டுகள், 11 மாதங்கள், 21 நாள்களாகச் செயல்பட்டு வருகிறது.

**சந்திரயான்-3திட்டம்:** சந்திரயான்-2 தோல்வியில் கிடைத்த பாடங்களின் விளைவாக, தொழில்நுட்ப ரீதியாக மேம்படுத்தப்பட்ட, தானியங்கும் திறன் கொண்ட லேண்டர், ரோவருடன் ரூ. 615 கோடி செலவில் உருவாக்கப்பட்ட சந்திரயான்-3 விண்கலம், ஆந்திர மாநிலம், ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள ஏவுதளத்தில் இருந்து ஜூலை 14-ஆம் தேதி எல்விஎம் மாக்-3 ராக்கெட் மூலம் விண்ணில் செலுத்தப்பட்டது.

கடந்த 4 ஆண்டுகளில் நிலவை ஆராய்ச்சி செய்ய இந்தியா மேற்கொண்டுள்ள 2-ஆவது முயற்சி இது. புவி சுற்றுப்பாதையில் இருந்து விலகி, கடந்த ஆக. 5-ஆம் தேதி நிலவின் சுற்றுப்பாதைக்கு மாற்றப்பட்ட சந்திரயான்-3 விண்கலம், 18 நாள்கள் நிலவைச் சுற்றி வந்தது. கடந்த ஆகஸ்ட் 7-ஆம் தேதி லேண்டர் சாதனம் விடுவிக்கப்பட்டது. அதன்பிறகு, விண்கலனுக்கும் நிலவின் தரைப்பகுதிக்கும் இடையிலான தொலைவு படிப்படியாக குறைக்கப்பட்டது.

**மென் தரையிறக்கம்:** அதன் பிறகு, '17 நிமிஷ சோதனை நேரம்' என்று இஸ்ரோ விஞ்ஞானிகளால் வர்ணிக்கப்பட்ட ஒரானர் லேண்டர் சாதனத்தின் மென் தரையிறக்கம், புதன்கிழமை மாலை 6.04 மணிக்கு வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது. தரையிறங்கும் நடைமுறைகளை லேண்டர் சாதனம் தானியங்கி முறையில் செயல்படுத்தியது.

இதற்காக, நிலவின் தரைப்பரப்பில் இருந்து குறைந்தபட்சம் 30 கி.மீ. தொலைவும், அதிகபட்சம் 100 கி.மீ. தொலைவும் கொண்ட நீள்வட்ட சுற்றுப்பாதையில் லேண்டர் பயணித்தது.

மெதுவாக தரையிறங்குவதற்காக லேண்டர் சாதனத்தின் கீழ்ப் பகுதியில் பொருத்தப்பட்டிருந்த 4 ராக்கெட் என்ஜின்கள் இயக்கப்பட்டன. இது லேண்டரின் வேகத்தைக் குறைக்க உதவியது. நிலவுக்கு நெருக்கமாக 7.4 கி.மீ. உயரத்தில் லேண்டர் சாதனம் வந்தபோது, அதன் வேகம் மணிக்கு 1,200 கி.மீ. ஆகக் குறைக்கப்பட்டது.

நிலவில் இருந்து 6.8 கி.மீ. உயரத்துக்கு லேண்டர் வந்தபோது, 2 ராக்கெட் என்ஜின்கள் மட்டும் இயக்கப்பட்டு, தரையிறங்குவதற்கு வசதியாக பக்கவாட்டில் இருந்த லேண்டர் 90 டிகிரிக்கு செங்குத்தாக நிலைநிறுத்தப்பட்டது.

நிலவில் இருந்து 800 மீட்டர் தொலைவுக்கு லேண்டர் வந்தபோது, அதன் வேகம் பூஜ்ஜியமானது. இந்நிலையில், லேண்டரின் உயரம் மேலும் குறைக்கப்பட்டு, 150 மீட்டர் உயரத்துக்கு கொண்டுவரப்பட்டது.

எந்த இடத்தில் தரையிறங்குவது என்பதை ஆராய்ந்த லேண்டர், மேடு, பள்ளங்கள் இல்லா சமதளத்தைக் கண்டறிந்த பிறகு, அங்கு தரையிறங்கத் தயாரானது. அதன்பிறகு லேண்டர் 60 மீட்டர் உயரத்துக்குக் கொண்டுவரப்பட்டது. அப்போது லேண்டரில் பொருத்தப்பட்டுள்ள லேசர் கேமரா, நிலவில் தரையிறங்கும் பகுதியை துல்லியமாகப் படம் பிடித்தது. அதன்மூலம் தரையிறங்கும் இடத்தை உறுதி செய்யும் லேண்டர், 10 மீட்டர் உயரத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

அங்கிருந்து விக்ரம் லேண்டர் சாதனம், வெற்றிகரமாக நிலவின் தரையில், திட்டமிட்டபடி, குறித்த நேரத்தில், மாலை 6.04 மணியளவில் கால் பதித்து, உலக சாதனை படைத்தது. இந்தப் பணியை நிறைவேற்றுவதற்கு லேண்டருக்கு சந்திரயான்-2 ஆர்பிட்டர் உதவியாக இருந்தது.

இஸ்ரோ வெளியிட்ட காட்சி விளக்கப் படத்தில், நிலவின் தென் துருவத்தில் தரையிறங்கும் சந்திரயான்-3 விண்கலத்தின் விக்ரம் லேண்டர்.

தரையிறங்கும்போது விக்ரம் லேண்டரின் கேமரா படம் பிடித்த நிலவின் தரைப் பகுதி.

## ஒட்டுமொத்த மனிதகுலத்துக்கும் சந்திரயான்-3 வெற்றி சொந்தம்

**புது தில்லி, ஆக. 23:** நிலவில் சந்திரயான்-3 விண்கலம் வெற்றிகரமாக தரையிறங்கியதன் மூலம் புதிய வரலாறு எழுதப்பட்டுள்ளது; இந்த வெற்றி ஒட்டுமொத்த மனிதகுலத்துக்கும் சொந்தம் என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

பிரிக்ஸ் மாநாட்டில் பங்கேற்க பிரதமர் மோடி தென்னாப்பிரிக்கா சென்றுள்ளார். நிலவில் சந்திரயான்-3 விண்கலம் வெற்றிகரமாக தரையிறங்கியதைத் தொடர்ந்து, தென் ஆப்பிரிக்காவின் ஜோஹன்னஸ்பர்க் நகரில் இருந்து இஸ்ரோ விஞ்ஞானிகள் இடையே காணொலி வழியாக அவர் புதன்கிழமை பேசினார்.

அப்போது அவர் தெரிவித்ததாவது: சந்திரயான்-3-இன் வெற்றி என்றென்றும் நினைவில் வைத்துப் பாராட்ட வேண்டிய தருணம். தற்போது நிலவில் இந்தியா தடம் பதித்துள்ள நிலையில், இது நிலவின் பாதையில் பயணிக்க வேண்டிய நேரம். ஜி20 கூட்டமைப்புக்கு இந்தியா தலைமை ஏற்றுள்ள வேளையில், இந்த மிகப் பெரிய சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது.

ஒரு பூமி, ஒரு குடும்பம், ஒரு எதிர்காலம் என்ற இந்தியாவின் அணுகுமுறை உலகம் முழுவதும் எதிரொலிக்கிறது. நிலவுக்கு சந்திரயான்-3 விண்கலத்தை அனுப்பும் திட்டமும் மனிதனை மையமாக கொண்ட அணுகுமுறையாகும். எனவே சந்திரயான்-3-இன் வெற்றி இந்தியாவுக்கு மட்டுமின்றி, ஒட்டுமொத்த மனிதகுலத்துக்கும் சொந்தமானது.

நிலவில் சந்திரயான்-3 தரையிறங்கியது வரலாற்றுத் தருணம். இதன் மூலம் புதிய வரலாறு எழுதப்பட்டுள்ளது. இது இந்தியா வளர்ந்த நாடாவதற்கான செய்தியைச் சொல்கிறது என்றார் அவர்.

**இஸ்ரோ தலைவருக்குப் பாராட்டு:** நிலவில் சந்திரயான்-3 தரையிறங்கியவுடன் உடனடியாக இஸ்ரோ தலைவர் சோமநாத்தை தொலைபேசியில் அழைத்து பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்தார். அப்போது பிரதமர் கூறுகையில், 'உங்கள் (சோமநாத்) பெயரும் நிலவுடன் சம்பந்தப்பட்டுள்ளது. உங்களுக்கும், உங்கள் இஸ்ரோ அணிக்கும் மனமார்ந்த வாழ்த்துகள். விரைவில் பெங்களூரு வந்து ஒட்டுமொத்த அணியையும் சந்திப்பேன்' என்று தெரிவித்தார்.

EVA STALIN

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# செப்டம்பரில் ஆதித்யா: இஸ்ரோ தலைவர்



**பெங்களூரு, ஆக. 23:** சந்திரயான்-3 வெற்றியைத் தொடர்ந்து, சூரியனை ஆய்வு செய்யும் ஆதித்யா-எல்1 விண்கலம் செப்டம்பரில் விண்ணில் ஏவப்படும் என இஸ்ரோ தலைவர் எஸ்.சோமநாத் தெரிவித்தார்.

பெங்களூரு தரைக் கட்டுப்பாட்டு மையத்தில் இருந்து சந்திரயான்-3 விண்கலத்தின் ('விக்ரம்') லேண்டர் நிலவில் தரையிறங்குவதை கண்காணித்து வந்த இஸ்ரோ தலைவர் சோமநாத், புதன்கிழமை மாலை 6.04 மணிக்கு லேண்டர் தரையிறங்கியதும் சக விஞ்ஞானிகளுக்கு வாழ்த்து தெரிவித்துப் பேசியதாவது:

சந்திரயான்-3 மற்றும் எதிர்வரும் விண்வெளித் திட்டங்களுக்கு அளித்து வரும் ஊக்கத்துக்காக பிரதமர் மோடிக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

தலைமுறை தலைமுறைகளாக இஸ்ரோ தலைவர்கள், விஞ்ஞானிகள் அளித்த உழைப்புதான் சந்திரயான் 3 வெற்றிக்கு காரணமாக அமைந்துள்ளது.

சந்திரயான்-3 விண்கலத்தின் வெற்றியைக் கொண்டாடும் இந்த நேரத்தில் சந்திரயான்-1, சந்திரயான்-2 விண்கலங்களைக் கட்டமைக்க பங்காற்றியக் குழுவினரையும் நன்றியோடு நினைத்துப் பார்க்கிறோம். சந்திரயான்-3 மூலம் மிகப் பெரிய வளர்ச்சியை அடைந்துள்ளோம்.

இந்த வெற்றியைத் தொடர்ந்து, சூரியனை ஆய்வு செய்யும் ஆதித்யா-எல் 1 விண்கலம் அடுத்த மாதம் (செப்டம்பர்) விண்ணில் ஏவப்படும் என்றார்.

EVA STALIN IAS ACADEMY

# 'பிரிக்ஸ்' கூட்டமைப்பை விரிவுபடுத்த முழு ஆதரவு

## பிரதமர் மோடி

**ஜோஹன்னஸ்பர்க், ஆக. 23:** உறுப்பு நாடுகளின் ஒருமித்த கருத்துடன் 'பிரிக்ஸ்' கூட்டமைப்பை விரிவுபடுத்த இந்தியா முழு ஆதரவளிக்கிறது என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

எதிர்காலத்துக்கு ஏற்ற வகையில் பிரிக்ஸ் கூட்டமைப்பை தயார்படுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

பிரேஸில், ரஷியா, இந்தியா, சீனா, தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகள் அங்கம் வகிக்கும் பிரிக்ஸ் கூட்டமைப்பின் 15-ஆவது உச்சிமாநாடு தென்னாப்பிரிக்காவின் ஜோஹன்னஸ்பர்க் நகரில் செவ்வாய்க்கிழமை தொடங்கியது.

மாநாட்டின் முழு அமர்வுக் கூட்டம் புதன்கிழமை நடைபெற்றது. சீன அதிபர் ஷி ஜின்பிங் உள்ளிட்ட தலைவர்கள் பங்கேற்ற இக்கூட்டத்தில், பிரதமர் மோடி நிகழ்த்திய உரை வருமாறு:

உறுப்பு நாடுகளின் ஒருமித்த கருத்துடன் பிரிக்ஸ் கூட்டமைப்பை விரிவுபடுத்த இந்தியா முழு ஆதரவளிக்கிறது. இக்கூட்டமைப்பை எதிர்காலத்துக்கு ஏற்ற வகையில் தயார்படுத்த வேண்டும்.

இந்தியாவில் கடந்த ஜனவரியில் நடைபெற்ற 'தெற்குலகின் குரல்' உச்சி மாநாட்டில் 125 நாடுகள் பங்கேற்று, தங்கள் கருத்துகளை முன்வைத்தன.

கடந்த இரு தசாப்தங்களாக, பிரிக்ஸ் கூட்டமைப்பு வியத்தகு பயணத்தை மேற்கொண்டு வருகிறது. தெற்குலகில் வளர்ச்சி நடவடிக்கைகளை முன்னெடுக்க, பிரிக்ஸ் வளர்ச்சி வங்கி முக்கியப் பங்காற்றி வருகிறது.

ரயில்வே ஆராய்ச்சிக் கூட்டமைப்புகள், சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு, புத்தாக்க நிறுவனங்கள் மேம்பாடு என இந்தியாவால் பரிந்துரைக்கப்பட்ட நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

இந்தியாவின் கரோனா தடுப்பூசி இணையதளமான 'கோவின்', எண்ம தளத்தில் இந்தியாவின் வெற்றிக்கு எடுத்துக்காட்டாக உள்ளது. இதுபோன்ற எண்ம தளங்களை, பிரிக்ஸ் நாடுகளுடன் பகிர்ந்துகொள்ள இந்தியா தயாராக உள்ளது.

பன்முகத் தன்மையே இந்தியாவின் மாபெரும் பலம். இந்தியாவில் எந்த பிரச்னைக்குமான தீர்வு, பன்முகத்தன்மையின் பரிசோதனையில் இருந்து பிறக்கின்றன. எனவே, இந்தியாவின் தீர்வுகளை உலகின் எந்த மூலையிலும் எளிதாக செயல்படுத்த முடியும்.

**ஜி20 கூட்டமைப்பில் ஆப்பிரிக்க ஒன்றியம்:** ஜி20 கூட்டமைப்பில் நிரந்தர உறுப்பினராக ஆப்பிரிக்க ஒன்றியத்தை (55 நாடுகளின் கூட்டமைப்பு) இடம்பெறச் செய்ய இந்தியா முன்மொழிந்துள்ளது.

இந்த முன்மொழிவுக்கு பிரிக்ஸ் நாடுகள் ஆதரவளிக்கும் என நம்புகிறேன். இது வெறும் எதிர்பார்ப்பு மட்டுமல்ல; தற்போதைய கால கட்டத்தின் தேவை என்றார் பிரதமர் மோடி.

**சீனாவும் ஆதரவு:** சீன அதிபர் ஷி ஜின்பிங், 'உலகளாவிய நிர்வாகத்தில் சமத்துவத்தை உறுதி செய்யும் வகையில், பிரிக்ஸ் குடும்பத்தில் கூடுதலான நாடுகளை கொண்டுவரும் செயல்முறைகள் விரைவுபடுத்தப்பட வேண்டும்' என்றார்.

பிரிக்ஸ் கூட்டமைப்பு, உலக மக்கள்தொகையில் 41 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. உலகின் மொத்த உற்பத்தியில் 24 சதவீதமும், உலக வர்த்தகத்தில் 16 சதவீதமும் இந்தக் கூட்டமைப்பு நாடுகள் பங்களிக்கின்றன.

# வந்தே பாரத் ரயில் தயாரிப்பு: ஐ.சி.எஃப்.-க்கு விருது!



**சென்னை, ஆக.23:** இந்தியாவின் முதல் அதிவேக ரயில் தொடரான 'வந்தே பாரத்' ரயிலை தயாரித்ததற்காக சென்னை ஒருங்கிணைந்த ரயில் பெட்டி தொழிற்சாலைக்கு (ஐ.சி.எஃப்.) 'நாட்டின் சிறந்த திட்டத்துக்கான' விருது வழங்கப்பட்டுள்ளது.

இந்த விருதை நிதி ஆயோக் நிறுவன இயக்குநர் விஜய்குமாரிடமிருந்து, ஐ.சி.எஃப். பொது மேலாளர் பி.ஜி. மல்லையா பெற்றுக்கொண்டார்.

இந்த விருதானது ஒவ்வோர் ஆண்டும் இந்தியாவின் சிறந்த தொழில் திட்டத்துக்காக இந்திய திட்ட மேலாண்மை நிறுவனம் சார்பில் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டு ஐ.சி.எஃப்.-இன் 'வந்தே பாரத் ரயில்', இந்தியாவின் உள்நாட்டு தயாரிப்பான விமானம் தாங்கி கப்பல் 'ஐ.என்.எஸ். விக்ராந்த்' மற்றும் ஜம்மு காஷ்மீரின் உலகின் மிக உயரமான ரயில் பாலமான 'செனாப் ரயில் பாலத் திட்டம்' உள்பட மொத்தம் 5 திட்டங்களுக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

இந்திய திட்ட மேலாண்மை நிறுவனம் சார்பில் அண்மையில் இணையவழி மூலம் நடைபெற்ற வருடாந்திர விருது வழங்கும் விழாவில், வந்தே பாரத் ரயிலை தயாரித்ததற்காக சென்னை ஒருங்கிணைந்த ரயில் பெட்டி தொழிற்சாலைக்கு (ஐ.சி.எஃப்.) 2023-ஆம் ஆண்டுக்கான விருது வழங்கப்பட்டுள்ளது.

# உலக துப்பாக்கி சுடுதல்: அமன்பிரீத்துக்கு தங்கம்

**பாகு, ஆக.23:** அஜர்பைஜானில் நடைபெறும் ஐஎஸ்எஸ்எஃப் உலக துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப்பில் இந்தியாவின் அமன்பிரீத் சிங், ஆடவருக்கான 25 மீட்டர் ஸ்டேண்டர்ட் பிஸ்டல் பிரிவில் புதன்கிழமை தங்கப்பதக்கம் வென்றார். அதிலேயே மகளிர் அணிகள் பிரிவு வெண்கலப் பதக்கம் பெற்றது.




முன்னதாக அமன்பிரீத் சிங் தனது இறுதிச்சுற்றில் 577 - 574 என்ற புள்ளிகள் கணக்கில் தென் கொரியாவின் லீ கன்ஹியோக்கை சாய்த்து முதலிடம் பிடித்தார். பிரான்ஸின் கெவின் சபோன் வெண்கலப் பதக்கம் பெற்றார். இந்தியாவின் ஹர்ஷ் குப்தா 573 புள்ளிகளுடன் 4-ஆம் இடம் பிடித்தார்.

அமன்பிரீத் சிங் (577), ஹர்ஷ் குப்தா (573), அக்ஷய் ஜெயின் (545) ஆகியோர் அடங்கிய இந்திய ஆடவர் அணி, 25 மீட்டர் ஸ்டேண்டர்ட் பிஸ்டல் அணிகள் பிரிவில் 1,695 புள்ளிகளுடன் நூலிழையில் பதக்க வாய்ப்பை பறிகொடுத்து 4-ஆம் இடம் பிடித்தது.

மகளிருக்கான 25 மீட்டர் ஸ்டேண்டர்ட் பிஸ்டல் அணிகள் பிரிவில் இந்தியாவின் தியானா (538), யாஷிதா ஷோகீன் (536), கிருத்திகா சர்மா (527) ஆகியோர் கூட்டணி மொத்தமாக 1,601 புள்ளிகளுடன் 3-ஆம் இடம் பிடித்தது. சீனா தங்கமும், அஜர்பைஜான் வெள்ளியும் பெற்றன. அதிலேயே தனிநபர் பிரிவில் இந்தியர்கள் மூவரும் முறையே 11, 12, 14-ஆவது இடம் பிடித்தனர்.

மகளிருக்கான டிராப் தகுதிச்சுற்றில் இந்தியாவின் ராஜேஸ்வரி குமாரி 73 புள்ளிகளுடன் 4-ஆம் இடம் பிடித்தார். அவர் அடுத்த கட்ட தகுதிச்சுற்றில் களம் காண, மற்ற இந்தியர்களான மனீஷா கீர் (68), பிரீத்தி ரஜக் (67) முறையே 24, 41-ஆவது இடங்களைப் பிடித்தனர். ஆடவர் டிராப் பிரிவில் தொடக்க சுற்றில் இந்தியாவின் பிருத்விராஜ் தொண்டைமான், கினான் செனாய், ஸோராவர் சிங் சந்து ஆகியோர் முறையே 72, 72, 68 புள்ளிகள் பெற்றனர்.

# விளையாட்டால் பெருமை பெறும் நாடு!



வி.பி. கலைராஜன்

**கடந்த முறை நடந்த ஒலிம்பிக் போட்டியில்தான் இந்தியாவின் நீரஜ் சோப்ரா பல ஆண்டு கால கனவை நனவாக்கும் வண்ணம் 87.88 மீட்டர் தூரம் ஈட்டி எறிந்து முதல் தங்கப்பதக்கத்தை வாங்கி இந்திய தேசிய கீதத்தை தடகள மைதானத்தில் ஒலிக்கச் செய்தார்.**

கட்டுரையாளர்:
முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்

# ‘கனவு தேசத்துக்கு ஒவ்வொரு வாக்கும் அவசியம்’

**புது தில்லி, ஆக. 23:** தேர்தலில் மக்களின் பங்களிப்பை ஊக்குவிக்க இந்திய தேர்தல் ஆணையத்தின் தேசிய தூதராக புதன்கிழமை நியமிக்கப்பட்ட சச்சின் டெண்டுல்கர், 'நாம் விரும்பும் கனவு தேசத்துக்கு ஒவ்வொரு வாக்கும் அவசியம்' என்று வலியுறுத்தினார்.

நாட்டின் 'ஜனநாயக திருவிழா' எனப்படும் தேர்தல் செயல்பாட்டில் பங்கேற்க வாக்காளர்களை ஊக்குவிப்பதற்காக பல்வேறு துறைகளைச் சேர்ந்த புகழ்பெற்ற இந்தியர்களை தனது 'தேசிய தூதர்'களாக தேர்தல் ஆணையம் நியமித்து வருகிறது.

நிகழாண்டு இறுதியில் 5 மாநில சட்டப்பேரவைத் தேர்தல்கள் மற்றும் அடுத்த ஆண்டு மத்தியில் மக்களவைத் தேர்தல் நடைபெறும் சூழலில், அடுத்த 3 ஆண்டுகளுக்கு தேர்தல் ஆணையத்தின் தேசிய தூதராக கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக தேர்தல் ஆணையத்துக்கும் சச்சினுக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் புதன்கிழமை கையொப்பமானது.

அந்த நிகழ்ச்சியில் சச்சின் டெண்டுல்கர் பேசியதாவது: இந்தியா உலகின் மிகப் பெரிய ஜனநாயகமாகும். தேர்தலில் தவறாமல் வாக்களிப்பது நம் அனைவரின் முதன்மைக் கடமையாகும். என் வாழ்வின் 2-ஆவது அத்தியாயத்திலும் இந்தியாவுக்காகப் பணியாற்றுவதைத் தொடர்கிறேன்.

## தேர்தல் ஆணையத்தின் புதிய தேசிய தூதர் சச்சின்



இந்திய தேர்தல் ஆணையத்தின் தேசிய தூதராக நியமிக்கப்பட்டதற்கான சான்றிதழை சச்சின் டெண்டுல்கருக்கு வழங்கிய தலைமைத் தேர்தல் ஆணையர் ராஜீவ் குமார். உடன், தேர்தல் ஆணையர்கள் அருண் கோயல், அனுப் சந்திர பாண்டே.

உலகிலேயே இளைஞர்கள் சராசரி அதிகமுள்ள நாடு இந்தியா எனக் கூறுகிறார்கள். ஆனால், வாக்களிப்பதில் நாம் பொறுப்பான நாடாகத் திகழ்கிறோமா என்று கேள்வி எழுந்தால் இல்லை என்பதே நியாயமான பதிலாக இருக்கும்.

வாக்களிப்பதில் மிகவும் பொறுப்பான நாடு இந்தியா என மக்கள் கூறுவதைக் கேட்க நான் விரும்புகிறேன். நமது நாட்டுக்கு நல்லது நடக்க விரும்புகிறோம். ஆனால், அதற்கு முயற்சிகள் தேவை. மக்கள் முன்வந்து வாக்களிப்பதுதான் அந்த முயற்சி. நாம் விரும்பும் கனவு தேசத்துக்கு மக்களின் ஒவ்வொரு வாக்கும் அவசியம் என்றார்.

இதையடுத்து பேசிய தலைமைத் தேர்தல் ஆணையர் ராஜீவ் குமார், 'கடந்த தேர்தல்களில் வாக்குப் பதிவு சதவீதம் குறைவாக இருந்ததென தேர்தல் ஆணையத்தால் கண்டறியப்பட்டுள்ள தொகுதிகள் மற்றும் வாக்குப் பதிவு மையங்களை ஆராய்ந்து, உரிய காரணத்தைக் கண்டறிந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள மாவட்ட தேர்தல் அலுவலர்களிடம் அறிவுறுத்தப்பட்டுள்ளது' என்றார்.

கடந்த மக்களவைத் தேர்தலின்போது, கிரிக்கெட் வீரர் எம்.எஸ்.தோனி, நடிகர் அமீர் கான், குத்துச்சண்டை வீராங்கனை மேரி கோம் போன்ற பிரபலங்கள் தேர்தல் ஆணையத்தின் தேசிய தூதர்களாக இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# நிலவின் தென் துருவத்தில் தடம் பதித்த முதல் நாடு இந்தியா

## திட்ட இயக்குநர் வீரமுத்துவேல்

**பெங்களூரு, ஆக. 23:** நிலவின் தென் துருவத்தில் கால் பதித்த முதல் நாடு இந்தியா என்று சந்திரயான் 3 திட்ட இயக்குநர் வீரமுத்துவேல் தெரிவித்தார்.

சந்திரயான்– 3 விண்கலத்தின் லேண்டர் கலன் ('விக்ரம்') புதன்கிழமை மாலை 6.04 மணிக்கு நிலவில் மெதுவாக இறங்கி தரையைத் தொட்டது. பெங்களூரு, பீன்யாவில் உள்ள தரைக் கட்டுப்பாட்டு மையத்தில் இருந்து இதைப் பார்த்துக் கொண்டிருந்த இஸ்ரோ தலைவர் எஸ்.சோமநாத், ஆரவாரம் செய்து சக விஞ்ஞானிகளுக்கு வாழ்த்தும், பாராட்டும் தெரிவித்தார்.

தரைக் கட்டுப்பாட்டு மையத்தில் குழுமியிருந்த விஞ்ஞானிகள் ஆரவாரம் செய்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். தென்னாப்பிரிக்காவின் ஜோகன்னஸ்பர்க் நகரில் இருந்து நேரலையில் இக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த பிரதமர் மோடிக்கு நன்றி தெரிவித்த சோமநாத், 'நிலவில் இந்தியா இருக்கிறது' என்று கூறினார்.

இதைக் கேட்ட பிரதமர் மோடி, கைதட்டி அவருக்கும், இஸ்ரோ விஞ்ஞானிகளுக்கும் பாராட்டுகளைத் தெரிவித்தார்.

அதன்பிறகு சந்திரயான்–3 திட்ட இயக்குநர் வீரமுத்துவேல், இணை இயக்குநர் கல்பனா, செயல்பாட்டு இயக்குநர் ஸ்ரீகாந்த், யூ.ஆர்.ராவ் செயற்கைக்கோள் மைய இயக்குநர் சங்கரன் ஆகியோரை பிரதமருக்கு இஸ்ரோ தலைவர் எஸ்.சோமநாத் அறிமுகம் செய்துவைத்தார்.

சந்திரயான்–3 திட்ட இயக்குநர் வீரமுத்துவேல் பேசுகையில், 'இது மகிழ்ச்சியான தருணம். இந்த வெற்றியை ஈட்டியுள்ளது மனதுக்கு நிறைவைத் தருகிறது. சந்திரயான்–3 விண்கலம் விண்ணில் ஏவப்பட்டதில் இருந்து, நிலவில் லேண்டர் கலன் தரையிறங்கிய வரை அனைத்தும் பிழையின்றி நிறைவேறின. நிலவில் மெதுவாகத் தரையிறங்க முடியும் என்பதைக் காட்டிய 4–ஆவது நாடாக இந்தியா உயர்ந்துள்ளது.

அதேபோல நிலவின் தென் துருவத்தில் கால் பதித்த முதல் நாடு இந்தியா என்பதில் பெருமிதமாக உள்ளது.

இத் திட்டம் வெற்றியடைய உதவிய இஸ்ரோ தலைவர், அனைத்து மையங்களின் இயக்குநர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்' என்றார்.



நிலவின் தென்துருவத்தில் சந்திரயான்–3 தடம் பதித்ததைத் தொடர்ந்து, சக விஞ்ஞானிகளுடன் செய்தியாளர்களைச் சந்தித்த இஸ்ரோ தலைவர் சோமநாத்.

## திட்ட இயக்குநரின் தந்தை நெகிழ்ச்சி

**விழுப்புரம், ஆக.23:** சந்திரயான்– 3 விண்கலம் நிலவில் தரையிறங்கும் காட்சியை புதன்கிழமை மாலை தொலைக்காட்சியில் பார்த்து, அதன் திட்ட இயக்குநர் வீரமுத்துவேலின் தந்தை பழனிவேல் நெகிழ்ந்தார்.

சந்திரயான்– 3 விண்கல திட்டத்தின் இயக்குநராக விழுப்புரத்தைச் சேர்ந்த வீரமுத்துவேல் (46) பணியாற்றி வருகிறார். இந்த விண்கலம் நிலவில் புதன்கிழமை மாலை வெற்றிகரமாகத் தரையிறங்கியதையொட்டி, விழுப்புரத்தில் அவருடன் படித்த முன்னாள் மாணவர்கள், பொதுமக்கள் பட்டாசு வெடித்தும், இனிப்புகளை வழங்கியும் கொண்டாடினர்.

மேலும், வீரமுத்துவேலின் தந்தையும் ஓய்வு பெற்ற ரயில்வே ஊழியருமான பழனிவேல், தனது வீட்டில் தொலைக்காட்சி வாயிலாக விண்கலம் நிலவில் தரையிறங்கும் காட்சியைப் பார்த்து நெகிழ்ந்தார்.

நிலவில் சந்திரயான்– 3 விண்கலம் தரையிறங்கும் காட்சியைக் காணும் தருணத்துக்காகத்தான் காத்திருந்தேன் என நெகிழ்ச்சியுடன் அவர் தெரிவித்தார். முன்னதாக, சந்திரயான் – 3 விண்கலம் நிலவில் வெற்றிகரமாகத் தரையிறங்க வேண்டி, பழனிவேல் விழுப்புரம் ரயில் நிலையத்திலுள்ள ராஜகணபதி கோயிலில் புதன்கிழமை காலை சிறப்பு வழிபாடு நடத்தினார்.

## சந்திரயான் திட்ட இயக்குநருக்கு முதல்வர் வாழ்த்து

**சென்னை, ஆக. 23:** சந்திரயான்–3 திட்ட இயக்குநர் வீரமுத்துவேலுக்கு தொலைபேசி மூலம் முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துத் தெரிவித்தார்.



அவர் தொலைபேசியில் பேசிய விவரம்: சந்திரயான் – 3 திட்டம் வெற்றி பெற்றதன் மூலம் தமிழ்நாட்டுக்கு மட்டுமின்றி உலக அளவில் பெருமை தேடித் தந்துள்ளீர்கள். உங்களுடைய தந்தையின் பேட்டியை தொலைக்காட்சியில் பார்த்தேன். உங்களை நினைத்து பெருமைப்பட்டுள்ளார் என்றார்.

இதற்கு பதிலளித்த வீரமுத்துவேல், தொலைபேசி வழியாகப் பேசி வாழ்த்தியதற்கு நன்றி என்றார்.




## இந்தியாவுக்கு நாசா பாராட்டு

**வாஷிங்டன், ஆக. 23:** 'சந்திரயான்-3' விண்கலத்தை நிலவின் தென்துருவத்தில் வெற்றிகரமாக தரையிறக்கி, புதிய வரலாறு படைக்கப்பட்டுள்ள நிலையில், இந்தியா மற்றும் இஸ்ரோவுக்கு அமெரிக்க விண்வெளி ஆய்வு அமைப்பான நாசா பாராட்டு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக நாசா தலைவர் பில் நெல்சன், எக்ஸ் சமூக வலைதளத்தில் வெளியிட்ட பதிவில், 'நிலவின் தென்துருவத்தில் சந்திரயான்-3 வெற்றிகரமாக தரையிறங்கியுள்ளது. இதற்காக இஸ்ரோவுக்கு பாராட்டுகள். நிலவின் மேற்பரப்பில் விண்கலத்தை மெதுவாக தரையிறக்கி வெற்றிகண்ட 4-ஆவது நாடு என்ற பெருமையை எட்டியுள்ள இந்தியாவுக்கு பாராட்டுகள். இத்திட்டத்தில் இந்தியாவுடன் ஒருங்கிணைந்து செயலாற்றுவதில், நாசா மகிழ்ச்சியடைகிறது' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

EVA STALIN IAS